1995 ஏப்ரல் 6]

1 கோடியே 22 லட்சத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது; 1994-95 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முடிய ஒரு கோடியே 10 லட்சத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 256, திருமதி வி.ஜி. மணிமேகலை, மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

256—

நரிக்குடியில் நூற்பு ஆலை அமைத்தல்.

38810—திருமதி வி. ஜி. மணிமேகலை :*

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிலில் பின்தங்கிய பகுதி என அறிவிக்கப்பட்ட அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி வட்டம், நரிக்குடியில் நூற்பு ஆலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்படும்?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திருமதி வி. ஜி. மணிமேகலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிமக்களின் நன்மையைக் கருதி அக்குடிமக்களைத் தழுவியே நல்ல ஆட்சியை செய்யும் அரசனது கட்டளையை — அந்த மக்கள் அவருடைய கட்டளையை தலைமேற்கொண்டு செயல் ஆற்றுகின்ற வகையில் வள்ளுவரின் கூற்றுக்கு இணங்க இன்றையதினம் தமிழக மக்கள் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் கட்டளையை ஏற்று நடந்து வந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அப்படிப்பட்ட செயற்குறிப்பு ஏதும் இல்லை என்று கூறிவிட்டார்கள். சத்துணவு தந்த சரித்திர நாயகர் புரட்சி தலைவர் அவர்களின் ஆட்சிக் காலத்திலே அருப்புக்கோட்டைத் தொகுதியில் இருக்கக்கூடிய நரிக்குடியில் ஒரு நூற்பாலை அமைத்துக் கொடுப்பேன் என்ற வாக்குறுதியை அந்தத் தொகுதி மக்களிடையே கொடுத்திருக்கிறார்கள். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10.55

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நரிக்குடியிலே அமைக்கப்பட்டிருக்கின்ற நூற்பாலைகள் இரண்டும் நரிக்குடிக்கு அருகிலேயே அமைக்கப்பட்டு இருக்கின்றன. தமிழ்நாட்டில் நூல் உற்பத்தியும் உபரியாக இருக்கின்ற காரணத்தினாலேதான் நரிக்குடியிலே அமைக்க முடியாது என்று குறிப்பிட்டேன். ஏற்கெனவே நரிக்குடிக்கு அருகாமையிலேயே இரண்டு நூற்பாலைகள் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலத்தில் சொன்னதைப்போல அமைக்கப்பட்டு இருக்கின்றன.

திருமதி வி. ஜி. மணிமேகலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் அவர்கள் அருப்புக்கோட்டை தொகுதியிலே நின்றபொழுது அங்கே இருக்கக்கூடிய மக்கள் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கின்றார்கள் என்ற காரணத்தினால் அந்தத் தொகுதியிலேதான் நூற்பாலைகளை அமைத்துக் கொடுக்கிறேன் என்ற வாக்குறுதியைக் கொடுத்தார். அருப்புக்கோட்டை தொகுதிக்கு சுற்றி, பக்கத்திலே இருக்கக்கூடிய இடங்களிலே அமைத்துத் தருகிறேன் என்று அவர் கூறவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்கள். அதனால் தயவுசெய்து, கருணையோடு, அவர்கள் இதை மறுபரிசீலனை செய்து அருப்புக்கோட்டை தொகுதியிலேயே ஒரு நூற்பாலையை அமைத்துத் தருவதற்கு ஆவன செய்வார்களா என்பதை தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழக அரசால் 18 நூற்பாலைகள் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்த 18 நூற்பாலைகளும் நஷ்டத்திலேதான் இயங்கிக்கொண்டு இருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்கிறேன். நரிக்குடிக்குப் பக்கத்திலே இருக்கின்ற அச்சங்குளத்திலே ஒரு நூற்பாலை இராமநாதபுரம் பக்கத்திலே இருக்கிறது. இன்னொன்று வ.உ.சி. மாவட்டத்தில் எட்டயபுரத்தில் இருக்கிறது. ஆக, இரண்டும் 40 கிலோ மீட்டர் தூரத்திலேயே இருக்கின்ற காரணத்தினால் இன்னொரு நூற்பாலையை நஷ்டத்திலே இயங்கக் கூடிய வகையிலே அமைப்பதற்கு அரசு முன் வராது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோள், நீங்கள் சொல்லுகின்ற நூற்பாலைகள் எல்லாம் அவருடைய தொகுதியைச் சுற்றிச் சுற்றி வந்துகொண்டு

இருக்கின்றன, அவருடைய தொகுதிக்கு வரவில்லை என்பதைத்தான் சொல்கிறார்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நஷ்டத்திலே நூற்பாலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தினால் புதிய நூற்பாலைகளை அமைக்கின்ற எந்தத் திட்டமும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. காஞ்சி பன்னீர்செல்வம்.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நடத்தும் கூட்டுறவு நூற்பாலைகளில் நஷ்டத்தில் இயங்குகின்ற சிலவற்றை தனியாருக்கு விற்றிட அரசு நடவடிக்கை எடுக்குமா என தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நஷ்டத்திலே இயங்கிக்கொண்டு இருக்கின்ற எந்த நூற்பாலையையும் தனியாருக்கு விற்கின்ற எண்ணம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெளிவாகத் தெரியப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 257, திருமதி என். கனகவல்லி, இருக்கையில் இல்லை.

வினா எண் 258, திரு. ம. தனபால், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

258—

மண்ணிவாக்கம் ஊராட்சி ஒன்றியப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்குதல்.

***38076—**திரு. ம. தனபால் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்போரூர் தொகுதியில் உள்ள மண்ணிவாக்கம் கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த ஆவன செய்யப்படுமா ?